# பம்மல் நகராட்சி
# 2019 – 2020 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. தோற்றம்

பம்மல் மூன்றாம்நிலை நகராட்சியானது 09.08.2010ம் தேதிய நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 154ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

1. நகராட்சியின் பரப்பளவு சுமார் 13.80 சதுர கிலோ மீட்டராகும். அறிக்கை ஆண்டில் நகராட்சியின் பரப்பளவு கூடுதலோ குறைவோ ஏதுமில்லை.

2. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணகெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 75870 ஆகும். இதில் ஆண்கள் 37971, பெண்கள் 37899 ஆகும்.

1991 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு ஏற்ப 11.06.1996ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, அரசு ஆணை எண் 135 ன்படி உறுப்பினர் எண்ணிக்கை 13 லிருந்து 21 ஆக உயர்த்தப்பட்டது. அதன்படி நகராட்சி கீழ்காணுமாறு 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு, கீழ்காணுமாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | .... | 21 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .... | 3 (வார்டு எண்.7, 15 மற்றும் 19) |
| பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | .... | 7 (வார்டு 2, 5, 10, 12, 16, 19 மற்றும் 20) |

## 2. நகர் மன்றம்

இந்நகர மன்றத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்குமான நகராட்சி மன்றத் தேர்தல்கள் மாநில தேர்தல் ஆணையத்தின் ஆணைகளுக்கு உட்பட்டு 18.10.2011ம் தேதி அன்று நடத்தப்பட்டன. நகர மன்றத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் பொது மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நகராட்சி தலைவராக திரு. சி.வி.இளங்கோவன், பி.ஏ.பி.எல் அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார். நகராட்சி அலுவலக வளாகத்தில் 25.10.2011 அன்று நகராட்சி ஆணையர் (பொ) அவர்களால் நகரமன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்விக்கப்பட்டு 24.10.2016 முடிய செயல்பட்டது.

திரு. பா.வெங்கடேசன் அவர்கள், நகரமன்றத் துணைத் தலைவராக மறைமுகத் தேர்தல் மூலம் நகர மன்ற உறுப்பினர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு 24.10.2016 முடிய செயல் புரிந்தார்.

## <u>3.ஆணையர்</u>

அறிக்கை ஆண்டில் 01.04.2019 முதல் 31.10.2019 வரை **திரு. உ. சரவணன்** நகராட்சி பொறியாளர் அவர்களும் 01.11.2019 முதல் 14.11.2019 வரையில் **திருமதி. ஆர். பெட்சி ஞான லதா, பி.இ.** நகராட்சி பொறியாளர் அவர்களும் 15.11.2019 முதல் 31.03.2020 வரையில் **திருமதி. பொ. மாரி செல்வி. பி.இ. எம்.பி.ஏ** அவர்களும் நகராட்சி ஆணையராகப் பொறுப்பு வகித்தனர்.

<u>நகராட்சி பொறியாளர்</u>

அறிக்கை ஆண்டில் 01.04.2019 முதல் 31.10.2019 வரை திரு. உ. சரவணன், இளநிலை பொறியாளர் அவர்களும், 01.11.2019 முதல் 31.03.2020 வரையில் திருமதி. ஆர். பெட்சி ஞான லதா, பி.இ. நகராட்சி பொறியாளராகப் பொறுப்பு வகித்தார்.

## <u>தனி அலுவலர் தலைமையில் நகர்மன்றக் கூட்டங்கள்</u>

அறிக்கை ஆண்டில் 01.04.2019 முதல் 31.10.2019 வரையில் தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) **திரு. உ. சரவணன்.** அவர்களின் தலைமையில் 6 சாதாரணக் கூட்டம் நடைபெற்றது . 01.11.2019 முதல் 14.11.2019 வரையில் **திருமதி. ஆர். பெட்சி ஞான லதா, பி.இ.** தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் தலைமையில் .ஒரு சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. 15.11.2019 முதல் 31.03.2020 வரையில் **திருமதி. பொ. மாரி செல்வி. பி.இ. எம்.பி.ஏ**

தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் தலைமையில் 6 சாதாரணக் கூட்டம் மற்றும் ஒரு அவசரக் கூட்டம் நடைபெற்றது . ஆக மொத்தம் அறிக்கை ஆண்டில் 13 சாதாரணக் கூட்டமும் ஒரு அவசரக் கூட்டமும் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வைக்கப்பட்ட பொருள்கள் முடிக்கப்பட்ட பொருள்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

1. கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை .... 306
2. கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை ..... 306
3. முடிவு செய்யப்படாத பொருள்களின் எண்ணிக்கை ..... 0

## 4. பணி நிர்வாகம்

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 139 பணியிடங்களில் ஆணையர், நகராட்சி பொறியாளர் உள்ளிட்ட இதர பணியாளர்கள் 2019–20 ம் ஆண்டில் 129 நபர்கள் பணி புரிந்தனர். பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பிற பயன்பாடுகளின் செலவு – 583.23 இலட்சம்.

இந்நகராட்சிகளில் கீழ்க்கண்ட பிரிவுகளின் மூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1. பொதுப்பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர். (தேர்வு நிலை) | – 1 | எண்ணிக்கை |
| 2. | மேலாளர் (வகுப்பு –IV) | – 1 | எண்ணிக்கை |
| 3. | உதவியாளர் | – 1 | எண்ணிக்கை |
| 4. | இளநிலை உதவியாளர் | –3 | எண்ணிக்கைகள் |
| 5. | பதிவுரு எழுத்தர் | – 1 | எண்ணிக்கை |
| 5. | அலுவலக உதவியாளர் | – 1 | எண்ணிக்கை |
| 6. | இரவு காவலர் | – 1 | எண்ணிக்கை |

**2. பொறியியல் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | இளநிலை பொறியாளர்(ந) | – 1 | எண்ணிக்கை |
| 2. | பொது பணி மேற்பார்வையாளர் | – 2 | எண்ணிக்கைகள் |
| 3. | பணி ஆய்வர் | – 1 | எண்ணிக்கை |
| 4. | பொருத்துநர் (நிலை–2) | – 1 | எண்ணிக்கை |
| 5. | வால்வு இயக்குபவர் | – 3 | எண்ணிக்கைகள் |
| 5. | குடிநீர் பணியாளர் | – 3 | எண்ணிக்கைகள் |
| 6. | மின்பணியளார் (நிலை–2) | – 1 | எண்ணிக்கை |
| 7. | தெருவிளக்கு உதவியாளர் | – 2 | எண்ணிக்கைகள் |
| 8. | ஓட்டுநர் | – 4 | எண்ணிக்கைகள் |

**3. வருவாய் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வருவாய் ஆய்வர் | – 1 | எண்ணிக்கை |
| 2. | வருவாய் உதவியாளர் | – 3 | எண்ணிக்கைகள் |

**3.நகரமைப்பு பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகரமைப்பு அலுவலர் (நிலை2) | – 1 | எண்ணிக்கை |
| 2. | நகரமைப்பு ஆய்வாளர் | – 2 | எண்ணிக்கை |

**4. பொது சுகாதாரப் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | துப்புரவு ஆய்வாளர் | – 1 | எண்ணிக்கை |
| 2. | துப்புரவு மேற்பார்வையாளர் | – 1 | எண்ணிக்கைகள் |
| 3. | ஓட்டுநர் | – 5 | எண்ணிக்கைகள் |
| 4. | துப்புரவு பணியாளர் | – 92 | எண்ணிக்கைகள் |

5. சமுதாய அமைப்பாளர் – 1 எண்ணிக்கை.

**5. மின் ஆளுமை**

1. புள்ளி விவரக்குறிப்பாளர் – 1 எண்ணிக்கை

மேற்படியாக இந்நகராட்சியில் பணியிடங்கள் உள்ளது. மொத்தமுள்ள 139 பணியிடங்களில் 129 நபர்கள் இந்நிதியாண்டில் பணிபுரிந்து வருகின்றனர்.

## இடவசதி

நகராட்சி அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் 2008-09ம் ஆண்டு ரூ.32.10 இலட்சத்தில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.30.00 இலட்சமும், பொதுநிதியில் ரூ.2.10 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

## 5. பொறியியல் பிரிவு

இந்நகராட்சியில் நகராட்சிப் பொறியாளர், இரண்டு பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் ஒரு பணி ஆய்வர் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் பொறியியல் பிரிவில் குடிநீர் பராமரிப்பு பணிக்கான 1 பொருத்துநர் (பொ), 5 குடிநீர் குழாய் பராமரிப்பவர்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக ஒரு மின்பணியாளர் பணிபுரிந்து வருகின்றனர். குடிநீர் விநியோகம் செய்யும் லாரிகள் இயக்கிட ஒப்பந்த அடிப்படையிலான ஒட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## சாலைகள் மேம்பாலங்கள் திட்டங்கள்

இந்நகராட்சியின் வழியே செல்லும் குன்றத்தூர் பல்லாவரம் பிரதான சாலை நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 01.04.2019ம் தேதி அன்று நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விவரம் பின் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரிட் சாலை | .... | 11.490 கி.மீ |
| 2. | தார் சாலை | .... | 99.786 கி.மீ |

| | | | |
|---|---|---|---|
| 3. | கல் சாலை | .... | 0.596 கி.மீ |
| | **மொத்தம்** | **....** | **111.872 கி.மீ** |

## சிறப்பு சாலைகள் திட்டம் (Special Road Programme)

2019–20ன் கீழ் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் 5.169 கி.மீ. சாலை பணிகள் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் உள்ளது.

## தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் (Tamil Nadu Urban Road Improvement Programmes)

2019–20 திட்டத்தின் கீழ் ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் 11.292 கி.மீ சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 14வது **மத்திய** நிதி குழு மான்யம் (14th Central Finance Commission)

2019–20 திட்டத்தின் கீழ் 27 சாலை சாலை பணிகள் 4.828 கி.மீட்டரி ரூ. 231.95 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLA Fund)

2019–20 நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து எண்ணிக்கையில் சவ்வூடு முறையிலான சுத்திகரிப்பு நிலையம் ரூ. 39.95 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MP Fund)

2019–20 நகராட்சி எல்லைக்குட்பட்ட பம்மல் நல்லதம்பி சாலையில் அமைந்துள்ள சமுதாய கூடத்தில் முதல் தளம் அமைத்தல் பணி ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## மாநில பேரிடர் மேலாண்மை நிதி

2019–20, 17 எண்ணிக்கையில் குடிநீர் பணிகள் ரூ. 120.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## தெரு விளக்குகள்

பம்மல் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக ஒரு மின்பணியாளர் பணிபுரிந்து வருகிறார். பராமரிப்பு பணிக்கென போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் பொது மக்களின் அடிப்படை வசதிகளின் ஒன்றான தெருவிளக்குகள் பராமரிப்பு பணி தனியார்மயமாக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தெரு விளக்குகள் பராமரிப்பு செலவினம் ரூ. 68,73,954/– ஆகும்.

பம்மல் நகராட்சியில் 2019–20 அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் | ..... | 1754 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | ..... | 844 |
| 3. | உயர் மின் கோபுர விளக்கு | ..... | 154 |
| 4. | சி.எப்.எல் விளக்கு (CFL Light) | ..... | 639 |
| 5. | LED Lights | ..... | 647 |
| | **மொத்தம்** | ..... | **4038** |

## குடிநீர் விநியோகம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தினசரி 0.50 மில்லியன் லிட்டர் குடிநீரும், சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினசரி 0.70 மில்லியன் லிட்டர் குடிநீரும், 91 இந்தியா மார்க் II கைபம்புகள், 218 சிறுமின் விசை பம்புகள் 4 எண்ணிக்கை நகராட்சி லாரிகள் குடிநீரும் ஆக

மொத்தம் 2.95 மில்லியன் லிட்டர் குடிநீரும் மற்றும் செங்கழுநீர்மலை குவாரி பள்ளங்களிலிருக்கும் சுத்திகரிக்கப்படும் தண்ணிர் 1.50 மில்லியன் லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 4.45 மில்லியன் லிட்டர் (MLD) தினசரி குடிநீர் பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 59.00 லிட்டர் (LPCD) வீதம் 6 நாட்கள் இடைவெளியில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம்**

பம்மல் நகராட்சியில் ஒருங்கிணைந்த குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் ரூ. 43.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி திட்டம்–IIIன் கீழ் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின் ஒப்பந்ததாரர் திருமிகு. Sriram EPC Private Limited மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நான்கு மண்டங்களில் இரண்டு மண்டலங்களில் பரிசார்த்த முறையில் சோதனை ஓட்டம் முடிவுபெற்றும், மீதமுள்ள இரண்டு மண்டலங்களில் பரிசார்த்த முறையில் சோதனை ஓட்டம் நடைபெற்றும் வருகிறது. மார்ச 2021க்குள் பணிகள் முடிக்கப்பட்டு திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மேலும், மேகொண்டு கூடுதலாகும் செலவினத் தொகை ரூ 15.44 கோடியினை IUDM 2019-20 திட்டத்தின் கீழ் திருத்திய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

| **Source of Funds** | **Amount** |
|---|---:|
| Loan received from TNUDF | 25,86,00,000 |
| Grant Receive from Grant Fund -I | 11,61,00,000 |
| Deposit Mobilized IUDM Grant | 2,00,00,000 |
| ULB Contribution | 4,72,60,105 |
| Others (Please Specify) - Int | 11,45,859 |
| **Total (A)** | **44,31,05,164** |
| Application of Funds | |
| Fund transferred by ULB to the implementing Agency (TWAD / CMWSSB) | 41,94,00,000 |
| Expenses incurred by the ULB directly for the project | |

| | |
|---|---|
| 1. FD for receiving Rs. 17.50 CR Loan | 2,35,28,700 |
| **Total (B)** | **44,29,28,700** |
| **Closing Balance (A-B)** | **1,76,464** |

## தூய்மை இந்தியா திட்டம் மற்றும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17 (SBM & SSWM 2016-17)

பம்மல் நகராட்சியில், தூய்மை இந்தியா திட்டம் மற்றும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17ன் கீழ் விஸ்வேசபுரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட மையத்தின் அருகில் தனியார் மனைகளில் பரவி இருந்த குப்பைகளை மேற்படி திட்டத்தின் கீழ் 'Bio Mining' முறையில் பகுப்பாய்ந்து தரம் பிரித்து அப்புறப்படுத்தும் பணி தொடங்கி, 2019–20ம் ஆண்டு சிறப்பாக ரூ. 267.20 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

பம்மல் நகராட்சியானது 13.80 சதுர. கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போது தூய்மை இந்தியா இயக்க புள்ளிவிவரப்படி சுமார் 22344 வீடுகளும், இதில் 89376 எண்ணிக்கையிலான மக்கள் தொகையும் உள்ளது. மேற்படி மக்கள் தொகையில் உருவாகும் திடகக்கிழவு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 0.350 கிராம் வீதம் தினசரி குப்பைகள் 31.00 மெ.டன் அளவிலான திடக்கழிவு உருவாகிறது.

இதில் ஈரக்கழிவு (Wet Waste) 15 மெ.டன் உருவாகுவதை, உரம் தயாரிப்பதற்காக இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்ட 6 இடங்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்க 6th SHPC –SBM 2017-18ஆம் ஆண்டு ரூ. 245.50 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை உரக்குடில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

| Sl. No | Ward No. | Location | Capacity (in MT) | Wards Coverage | Total No. of House Hold Coverage | Population | Wet Waste (40%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | Viswesapuram Park S.No. 148 | 3.00 | 4,9,5Part,7 Part and 8 | 4102 | 16408 | 2.20 |
| 2. | 9 | SBI Colony | 3.00 | 5 Part, 6 and 7 Part | 2667 | 10669 | 1.40 |
| 3 | 1 | Viswesapuram Compost | 4.00 | 1,2,3Part, 11 | 4893 | 19574 | 2.60 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Yard Unit – 1 | | and 12 | | | |
| 4. | 1 | Viswesapuram Compost Yard Unit – 2 | 4.00 | 3Part, 10,14,15,16 and 17 | 3997 | 15986 | 2.20 |
| 5. | 21 | Jain Housing Unit – 1 | 3.00 | 13,19,20 and 21 | 2482 | 9928 | 1.30 |
| 6. | 21 | Jain Housing Unit – 2 | 3.00 | 18 | 4203 | 16811 | 2.30 |
| | | | **20.00** | **21** | **22344** | **89376** | **12.00** |

இந்நகராட்சி பகுதியில் விஸ்வேஷபுரம் பூங்கா, சங்கர் நகர் பூங்கா, திருப்பணந்தாள் ஏரி, பிரசாந்தி நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் உருவாகும் குப்பைகள் மற்றும் அதனை சார்ந்த குடியிருப்புகளில் மக்கும் குப்பைகளை அதே இடத்தில் உரம் தயாரிக்கும் பொருட்டு (Onsite Compost) அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு நுண்ணுரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

| Sl. No | Ward No. | Location | Capacity (in MT) | Total No. of House Hold Coverage | Population | Wet Waste (40%) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 12 | Shankar Nagar 1st Main Road (Park) | 0.50 | 82 | 336 | 0.46 |
| 2. | 1 | Viswesapuram (Park 1) | 0.50 | 91 | 364 | 0.50 |
| 3 | 10 | Thirupananthal Lake | 0.50 | 64 | 256 | 0.35 |
| 4. | 13 | Prasanthi Nagar, (Park) | 0.50 | 89 | 356 | 0.49 |
| | | | **2.00** | **326** | **1312** | **1.80** |

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016ன்படி, இந்நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் உள்ள குடியிருப்புகளில், 100% சதவீதம் விடு, விடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து, மக்கும் குப்பைகளை இயற்கை உரம் தயாரிக்கும் பணிக்கு, பசுமை உரக்குடில்களுக்கும், விற்பனைக்குகந்த மறு பயன்பாட்டுக் கழிவுகள் போக, பயனற்ற எரியூட்ட தகுந்த கழிவுகளை Balling செய்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப வளம் மீட்பு மையத்திற்கும் (RRC) எடுத்துச்செல்லும் பணிக்காக 13 எண்ணிக்கையிலான இலகு ரக வாகனங்கள் 13 எண்ணிக்கைகள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டு

பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வாகனங்களில் தலா 4 பணியாட்கள் அமர்த்தப்பட்டு 1200 வீடுகளுக்கு தினசரி சென்று, குப்பைகளை தரம் பிரித்து வாங்கி, மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளை செய்து வருகின்றனர்.

15 (BOV) பேட்டரியால் இயங்கும் வாகனங்களுக்கு தலா இரண்டு பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தினசரி, ஒவ்வொரு வாகனமும் 400 வீடுகள் வீதம் நேரிடையாக சென்று குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்படுகிறது.

இப்பணியினை சிறப்பாக செய்வதற்கு தூய்மையான இந்தியா திட்டத்தின் கீழ் 7th SHPC – SBM 2018-19ல் 13 எண்ணிக்கை LCV மற்றும் 15 எண்ணிக்கை BOV வாங்குவதற்கு ரூ. 99.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வாகனங்கள் வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

பணியாளர்கள் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு போதுமான பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டால் மட்டுமே நுண்ணுரம் தயாரிக்கும் பணி சிறப்பாக செய்யப்படும் என கருத்தில் கொண்டு 126 பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியல் அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதியின் அடிப்படையில் (ந.க.எண். 589/2018/எச்1) பணியினை செய்ய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு தேவையான பணியாளர்கள் பெறப்பட்டு பணிகள் தற்போது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## பொது சுகாதாரம்

பொது சுகாதாரப் பணிகள் மேற்பார்வை செய்ய ஒரு துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் கீழ் 92 துப்புரவு பணியாளர்கள் அறிக்கையாண்டில் பணிபுரிந்து வந்துள்ளனர். பம்மல் நகராட்சியில் பொது மக்களின் பொது சுகாதாரத்தை பேணிக் காக்கும் பொருட்டு நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பம்மல் நகராட்சியில் பொது சுகாதாப் பணிக்கென கீழ்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | டிப்பர் லாரி | 1 எண்ணிக்கை |
| 2. | மினி லாரி | 1 எண்ணிக்கை |
| 3. | டிராக்டர் | 2 எண்ணிக்கை |
| 4. | இலகுரக வாகனம் (LCV) | 13 எண்ணிக்கை |

| | | |
|---|---|---|
| 5. | JCB | 1 எண்ணிக்கை |
| 6. | தள்ளு வண்டி | 10 எண்ணிக்கை |
| 7. | பேட்டரியால் இயங்கும் வாகனம் | 15 எண்ணிக்கை |

மேற்கண்ட வாகனங்களுக்கான பராமரிப்பு செலவினம் அறிக்கையாண்டில் ரூ..54.47 இலட்சம் ஆகும். மேலும் பொது சுகாதார உபகரணங்கள் மற்றும் கொசு ஒழிப்புப் பணிக்கென அறிக்கையாண்டில் ரூ. 130.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**பிறப்பு இறப்பு பதிவு**

பம்மல் நகராட்சியில் 2019–20ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு இறப்புகள் விவரம் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| பிறப்பு | 481 |
| இறப்பு | 379 |
| இறந்து பிறந்தவை | 0 |

**தெரு நாய்கள் கருத்தடை**

பம்மல் நகராட்சியில் அறிக்கையாண்டில் 125 தெரு நாய்கள் புளு கிராஸ் ஆப் இந்தியா அமைப்பின் மூலம் பிடிக்கப்பட்டு கருத்தடை செய்யப்பட்டது. மேற்படி பணிக்கான செலவினம் ரூ. 87500/– ஆகும்.

**தீவிர துப்புரவு பணி**

பம்மல் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் குடியிருப்பு பகுதிகளில் வாரம் ஒருமுறை சுழற்சி முறையில் தீவிர துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது.

**விழிப்புணர்வு முகாம்**

பம்மல் நகராட்சியில் பொது மக்களுக்கு குடிநீரைக் காய்ச்சி பருகவும், சிக்கன் குனியா, பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பாதிக்காத வண்ணம் நடந்து கொள்ளும் விதம் மற்றும் கழிவுநீர் அகற்றும் முறை குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. மேலும் இவை குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

மேலும் தெரு நாய்கள் தொல்லை, 40 மைக்ரானுக்கு குறைவாக உபயோகிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், காலரா போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு நாடகங்கள் வாயிலாக பம்மல் நகராட்சியின் குடிசைப் பகுதிகளில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

பம்மல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவும் நோய்களைத் தடுக்கும் விதமாக கொசு மருந்து மற்றும் கொசுப்புழு மருந்து தெளிக்கப்பட்டும், கழிவு நீர் கால்வாய்களை தூர்வாரப்பட்டும், சுத்தம் மற்றும் கழிவுநீர் நலசங்கங்கள், திருமணமண்டபங்கள், உணவகங்கள் போன்றவற்றில் விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் பேனர்கள் வைத்து மக்களிடையே விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

தீவிர டெங்கு காய்ச்சல் மற்றம் விழிப்புணர்வு பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு தினக்கூலி அடிப்படையில் 60 DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## அனைவருக்கும் வீடு திட்டம்

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் மத்திய அரசின் பிரதம மந்திரி ஆயோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு என 1484 பயனாளிகள் சர்வே மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டக் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**2019–2020 ல் பம்மல் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு வரவுகள் பெறப்பட்டுள்ளது.**

## PROPERTY TAX

| No of Assessments | Demand | | | Collection | | | Balance | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Arrear | Current | Total | Arrear | Current | Total | Arrear | Current | Total |
| 19982 | 220.05 | 349.42 | 569.47 | 114.79 | 298.00 | 412.79 | 105.26 | 51.42 | 156.68 |

## VLT

| No of Assessments | Demand | | | Collection | | | Balance | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Arrear | Current | Total | Arrear | Current | Total | Arrear | Current | Total |
| 554 | 14.14 | 4.26 | 18.40 | 10.99 | 2.65 | 13.63 | 3.15 | 1.62 | 4.77 |

## PROFESSION TAX

| No of Assessments | Demand | | | Collection | | | Balance | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Arrear | Current | Total | Arrear | Current | Total | Arrear | Current | Total |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1085 | 63.65 | 75.30 | 138.95 | 33.24 | 63.30 | 96.54 | 30.41 | 12.00 | 42.41 |

**<u>WATER CHARGE</u>**

| No of Assessments | Demand | | | Collection | | | Balance | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Arrear | Current | Total | Arrear | Current | Total | Arrear | Current | Total |
| 11254 | 70.01 | 67.49 | 137.50 | 28.98 | 54.59 | 83.57 | 41.03 | 12.91 | 53.94 |

மேலும், **2019–2020** அறிக்கையாண்டில் கீழ்கண்டுள்ள விவரப்படி மான்யங்களும் கடன்களும் பெறப்பட்டுள்ளது.

1. மாநில நிதி குழு மான்யம் – ரூ.**8,50,82,050/–**
2. மாநில நிதி குழு செயல் திறன் மான்யம் – ரூ. **52,53,000/–**
3. முத்திரைத்தாள் மீதான பதிவுக் கட்டணம் – ரூ.**1,17,97,299/–**

4. 14வது நிதிக் குழு மான்யம் – ரூ.1,71,43,761/–
5. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (2017–18) – ரூ.1,96,30,000/–
6. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (2018–19) – ரூ.1,90,00,000/–
7. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (2019–20) – ரூ. 70,14,000/–
8. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – ரூ. 25,00,000/–
9. வறட்சி மான்யம் – ரூ. 1,20,00,000/–
10. கல்குவாரியில் பெறப்படும் தண்ணீரினை சுத்திகரித்து பொதுமக்களுக்கு விநியோகித்தல் திட்டம் – ரூ.1,94,63,000/–
11. Bio Mining Grant – ரூ. 73,48,000/–
12. கொரோனா நோய் தடுப்பு மான்யம் – ரூ. 4,00,000/–
13. அம்மா உணவக செலவின மான்யம்(கொரோனா ஊரடங்கு) – ரூ. 2,00,000/–
14. புதிய குடிநீர் திட்டத்திற்கான கடன் – ரூ. 76,00,000/–

2019–20 ம் நிதியாண்டில் பொது நிதிக் கணக்கில் ஆரம்ப இருப்பாக ரூ.987.15 இலட்சம் உள்ளது. வரவாக ரூ.3437.45 இலட்சம் பெறப்பட்டுள்ளது. செலவாக ரூ.3201..40 இலட்சம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதி இருப்பாக ரூ.1223.20 உள்ளது.

## PAMMAL MUNICIPALITY

### LOAN OUTSATNDING BALANCE AS ON 31.03.2020

| S.No. | Name of the Lending Agency | | Openeing Balance as on 01.04.2019 | | Receipts duirng the Year | Repayment Due for the Year | | Actual Repayment for the year | | Balance as on 31.03.2020 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Principal | Interest | | Principal | Interest | Principal | Interest | Principal | Interest |
| **1** | **2** | | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** |
| | | | | | | | | | | | |
| 1 | TNUDF (WSIS) | LLD0001936 | 40000000 | 0 | 0 | 0 | 3620000 | 0 | 3620000 | 40000000 | 0 |
| | | LLD0001943 | 45000000 | 0 | 0 | 0 | 4072500 | 0 | 4072500 | 45000000 | 0 |
| | | LLD0001978 | 60000000 | 0 | 0 | 0 | 5430000 | 0 | 5430000 | 60000000 | 0 |
| | | LLD0001992 | 30000000 | 0 | 0 | 0 | 2715000 | 0 | 2715000 | 30000000 | 0 |
| | | LLD0002010 | 40000000 | 0 | 0 | 0 | 3680000 | 0 | 3680000 | 40000000 | 0 |
| | | LLD0002050 | 36000000 | 0 | 0 | 0 | 3529775 | 0 | 3529775 | 36000000 | 0 |
| | | LLD0002096 | 0 | 0 | 7600000 | 0 | 272018 | 0 | 272018 | 7600000 | 0 |
| | | | **251000000** | **0** | **7600000** | **0** | **23319293** | **0** | **23319293** | **258600000** | **0** |
| | | | | | | | | | | | |
| 2 | Govt. Loan | | 1871537 | 6349840 | 0 | 0 | 0 | 0 | 0 | 1871537 | 6349840 |
| | | | | | | | | | | | |
| | | **Grand Total** | **252871537** | **6349840** | **7600000** | **0** | **23319293** | **0** | **23319293** | **260471537** | **6349840** |
| | | | | | | | | | | | |

## பொது

தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு நகராட்சி வருவாயை பெருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி தனது வருவாயை பெருக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய கவனம் செலுத்தப்பட்டது.

அறிக்கை ஆண்டில் திட்டப்பணிகள், மற்றும் பொது நிதியின் திட்டத்தின் கீழ் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பல்வேறு நல திட்டப் பணிகளை இந்நகராட்சிக்கு அனுமதித்ததற்காக தமிழ்நாடு அரசுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கும் இதர அரசு துறையினருக்கும் உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நிர்வாகம் சிறப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும் செயல்பட தொடர்ந்து உறுதுணையாய் இருந்து வரும் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையர்
பம்மல் நகராட்சி.